மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ், பி.ஏ., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20 ஆம் நாள் சனிக்கிழமை
இ.ம.எண்.03/2021
அ.வ.எண்.270/2015

சரோஜா ...மனுதாரர்/வாதி

/எதிராக/

1. மல்லிகா (இறந்துவிட்டார்)
2. செல்வம்
3. குமார் ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

4. சாரதா ...எதிர்மனுதாரர்/உத்தேசதரப்பினர்

இம்மனு கடந்த 12.11.2021 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.பி.கோபிநாத் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் இறந்தவராகவும், 2ம்எதிர்மனுதாரர் தோன்றாதரப்பினராகவும், 3, 4ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.மோகன்ராம் அவர்கள் ஆஜராகியும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

## உத்தரவு

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 22 விதி 9 பிரிவு 151ன் கீழ் வழக்கு அற்றுப்போனதை ரத்து செய்யக் கோரி மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம் : –

வழக்கு நிலுவையின்போது 1ம்பிரதிவாதி 09.05.2021ல் உத்தேசதரப்பினரை வாரிசாக விட்டு இறந்துவிட்டார். உத்தேசதரப்பினரை சேர்க்க 4 நாட்கள் காலதாமதமாகிவிட்டதால் வழக்கு அற்றுப்போனது (abated) ஆகிவிடும். ஆகவே வழக்கு அற்றுப்போனதை ரத்துசெய்ய கோரி மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார்.

<u>2) 4ம்எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டு 3ம்எதிர்மனுதாரரால் ஏற்றுக் கொள்ளப்பட்ட எதிருரையின் சுருக்கம்:</u>

1ம்பிரதிவாதி 02.09.2021ல் உத்தேசதரப்பினரை வாரிசாக இறந்துவிட்டார் என கூறுவது தவறாகும். 90 நாட்கள் கழித்து 1ம்பிரதிவாதியின் வாரிசை சேர்க்க மனுதாக்கல் செய்துள்ளதால் 4 நாட்கள் காலதாமதம் ஏற்பட்டுள்ளது. ஆனால் காவரையறைச் சட்டம் பிரிவு 5ன்கீழ் மனுதாக்கல் செய்யாததால் மனு நிலைக்கத்தக்கதல்ல என்பதால் மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென 3, 4ம் எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளார்கள்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பில் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் முன்னிலைப்படுத்தவில்லை.

<u>4) பிரச்சினை :</u>–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா என்பதே ஆகும்.

<u>5) பிரச்சினைக்கான தீர்வு</u>

(i) மனுதாரர் தரப்பில் வழக்கு நிலுவையின்போது 1ம்பிரதிவாதி 09.05.2021ல் உத்தேசதரப்பினரை வாரிசாக விட்டு இறந்துவிட்டார் எனவும், உத்தேசதரப்பினரை சேர்க்க 4 நாட்கள் காலதாமதமாகிவிட்டதால் வழக்கு அற்றுப்போனது (abated) ஆகிவிடும் எனவும், எனவே வழக்கு அற்றுப்போனதை ரத்துசெய்ய கோரி மனுதாரர் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளது தெரியவருகிறது.

(ii) 3, 4ம்எதிர்மனுதாரர்கள் தரப்பில் 1ம்பிரதிவாதி 02.09.2021ல் உத்தேசதரப்பினரை வாரிசாக இறந்துவிட்டார் என கூறுவது தவறு எனவும், 90 நாட்கள் கழித்து 1ம்பிரதிவாதியின் வாரிசை சேர்க்க மனுதாக்கல் செய்துள்ளதால் 4 நாட்கள் காலதாமதம் ஏற்பட்டுள்ளது எனவும், ஆனால் காவரையறைச் சட்டம் பிரிவு 5ன்கீழ் மனுதாக்கல் செய்யாததால் மனு நிலைக்கத்தக்கதல்ல என்பதால் மனுவினை தள்ளுபடி செய்ய வேண்டுமென 3, 4ம் எதிர்மனுதாரர்கள் கூறியுள்ளது தெரிய வருகிறது.

(iii) இருதரப்பிலும் 90 நாட்களுக்குள் 1ம்பிரதிவாதியின் வாரிசுகளை சேர்க்க வேண்டும் என்பதை ஒப்புக் கொண்டுள்ளனர். காலவரையறைச் சட்டம் பிரிவு 120ம் 90 நாட்களுக்குள் இறந்துபோன தரப்பினர்களின் வாரிசுகளை சேர்க்க வேண்டும் என கூறியுள்ளது தெரிய வருகிறது. மேலும் இருதரப்பிலும் வாரிசுகளை சேர்க்க 4 நாட்கள் காலதாமதம் என்பதையும் ஒப்புக்கொண்டுள்ளனர். இந்நிலையில் உரிமையியல் நடைமுறைச் சட்டம் கட்டளை 22 விதி 4(3)ன்படிக்கு 90 நாட்களுக்குள் 1ம்பிரதிவாதியின் வாரிசுகளை சேர்க்காததால் வழக்கு அற்றுப்போய்விடும். அவ்வாறு வழக்கு அற்றுப்போனதை காலவரையறைச் சட்டம் உறுபு 121ன்படிக்கு 60 நாட்களுக்குள் ரத்து செய்ய வேண்டும். அவ்வாறு 60 நாட்களுக்குள் வழக்கு அற்றுப்போனதை ரத்து செய்யாவிட்டால் தான் காலவரையறைச் சட்டம் பிரிவு 5ன்கீழ் மனுதாக்கல் செய்ய வேண்டும். ஆனால் மனுதாரர் வழக்கு அற்றுப்போனதிலிருந்து 4 நாட்களிலேயே அற்றுப்போனதை ரத்து செய்ய மனுதாக்கல் செய்துள்ளதால் காலவரையறைச் சட்டம் பிரிவு 5ன்கீழான மனு தேவையில்லை என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

(iv) 3, 4 எதிர்மனுதாரர்கள் தரப்பில் 09.05.2021ல் 1ம்பிரதிவாதி இறந்துள்ளதாக கூறுவது தவறு என கட்சி செய்தபோதும், எந்த தேதியில் இறந்துவிட்டார் என கூறவில்லை. எனவே பிரமாண பத்திரிக்கையிலிருந்து 1ம்பிரதிவாதி 09.05.2021ல் இறந்துள்ளது தெரியவருவதால் 3, 4 எதிர்மனுதாரர்களின் கட்சி ஏற்புடையதல்ல என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

(v) எதிர்மனுதாரர்கள் தரப்பில் 1ம்பிரதிவாதிக்கு வேறு வாரிசுகள் உள்ளதாக கட்சி செய்யாத நிலையில் மனுவிலிருந்து உத்தேசதரப்பினர் இறந்துபோன 1ம்பிரதிவாதியின் வாரிசு என்பது தெரியவருவதாலும், இவ்வழக்கானது பாகபிரிவினை கோரிதாக்கல் செய்துள்ளதாலும், உத்தேச தரப்பினர் இவ்வழக்கிற்கு தேவையான தரப்பினர் என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. ஆனால் 4 நாட்கள் காலதாமதமாக மனுதாக்கல் செய்துள்ளதால் மனுதாரரால் 3ம்எதிர்மனுதாரருக்கு ஏற்பட்ட காலவிரையத்தை ஈடு செய்யும் வகையில் மனுதாரர் 3ம்எதிர்மனுதாரருக்கு ரூ.300/– செலவுத்தொகையாக

25.11.2021 க்குள் செலுத்தும்பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என உத்தரவிடப்படுகிறது.

முடிவாக, மனுதாரர் 3 ம்எதிர்மனுதாரருக்கு ரூ.300/– செலவுத்தொகையாக 25.11.2021 க்குள் செலுத்தும்பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என உத்தரவிடப்படுகிறது. அழைக்க 26.11.2021.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2021 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 20 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

ஒப்பம்/–திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.

மனுதாரர் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை

எதிர்மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள்:– இல்லை

ஒப்பம்/–திரு.எஸ்.பிரின்ஸ் சாமுவேல் ராஜ்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.